பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**06 04 2026** **7 15**

திங்கட்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மேற்குவங்கத்தில் பிஜேபி ஆட்சிக்கு வந்தால், மாநிலத்தின் வளர்ச்சி உறுதி செய்யப்படும் என்று அக்கட்சியின் மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி உறுதியளித்துள்ளார்.

2. சமையல் எரிவாயு கிடங்குகளில் இருந்து நேரடியாக எல்.பி.ஜி சிலிண்டர்களை விற்பனை செய்வதற்கு தில்லி அரசு முழுமையாக தடை விதித்துள்ளது.

3. மேற்காசிய நிலைமை குறித்து வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் கத்தார் பிரதமருடன் ஆலோசனை நடத்தினார்.

4. ஹார்முஸ் ஜலசந்தியை மீண்டும் திறக்க ஈரானுக்கு கொடுக்கப்பட்ட காலக்கெடுவை அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் நீட்டித்துள்ளார்.

5. ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டி கிர்கிஸ்தான் தலைநகர் **Bishkek**-ல் இன்று தொடங்குகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மேற்குவங்கத்தில் பிஜேபி ஆட்சிக்கு வந்தால், மாநிலத்தின் வளர்ச்சி உறுதி செய்யப்படும் என்று அக்கட்சியின் மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி உறுதியளித்துள்ளார்.

மேற்குவங்கத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் நெருங்கி வரும் வேளையில், அரசியல் கட்சித் தலைவர்கள் மாநிலம் முழுவதும் தீவிரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிஜேபி மூத்த தலைவரும் பிரதமருமான திரு. நரேந்திர மோடி, நேற்று கூச்பெஹார் மாவட்டத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றினார்.

ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் அரசை விமர்சித்த அவர், மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாகவும், நிர்வாகத் திறமையின்மை நிலவுவதாகவும் குறிப்பிட்டார்.

மால்டா மாவட்டத்தில் நீதித்துறை அதிகாரிகளை ஒரு கும்பல் பல மணிநேரம் சிறைபிடித்த சம்பவத்தையும், அதில் உச்சநீதிமன்றம் தலையிட வேண்டியிருந்த சூழலையும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேற்குவங்கத்தில் பிஜேபி ஆட்சிக்கு வந்தால் தொழில்துறை, விவசாயிகளின் வருமானம், பெண்களின் பாதுகாப்பு மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்று திரு. நரேந்திர மோடி உறுதியளித்தார்.

திரிணாமுல் காங்கிரஸ் தலைவரும் மாநில முதலமைச்சருமான திருமதி மம்தா பானர்ஜி நேற்று மேற்கு வங்கத்தின் பல்வேறு பகுதிகளில் பொதுக்கூட்டங்களில் உரையாற்றினார்.

முர்ஷிதாபாத் மாவட்டத்தின் சம்ஷெர்கஞ்ச், ஜியாகஞ்ச், அஜிம்கஞ்ச் ஆகிய இடங்களில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அவர் பங்கேற்று பேசினார்.

காங்கிரஸ், இடதுசாரிகள் மற்றும் பிற அரசியல் கட்சிகளும் சிறிய அளவிலான பொதுக்கூட்டங்கள் மூலம் மாநிலம் முழுவதும் தங்கள் பிரச்சாரத்தை தீவிரப்படுத்தி வருகின்றன.

இம்மாநிலத்தில் இந்த மாதம் 23 மற்றும் 29 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டங்களாக வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

<<<<>>>>

அசாம் மாநிலத்தில் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் முடிவடைய இரண்டே நாட்கள் உள்ளதால் பிஜேபி மற்றும் காங்கிரஸ் மூத்த தலைவர்கள் மாநிலம் முழுவதும் பொதுக்கூட்டங்களில் உரையாற்றி வருகின்றனர்.

இம்மாநிலத்தில் வரும் வியாழக்கிழமை ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

பிஜேபி மூத்த தலைவர் திரு. சர்பானந்த சோனோவால், தேமாஜியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றினார்.

முந்தைய காங்கிரஸ் அரசாங்கங்கள் சட்டவிரோத குடியேற்றத்தையும் நில ஆக்கிரமிப்பையும் அனுமதித்ததாக அவர் குற்றம் சாட்டினார்.

பிஜேபி அரசு பழங்குடியின மக்களின் நலனுக்கு முன்னுரிமை அளித்து, அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக எட்டு லட்சத்திற்கும் அதிகமான நிலப் பட்டாக்களை வழங்கியுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

இதற்கிடையில், பிஜேபி மூத்த தலைவர் திரு. ஹிமந்த பிஸ்வா சர்மா பொங்கைகான், பலாஷ்பாரி மற்றும் கோல்பாரா ஆகிய இடங்களில் நடைபெற்ற பேரணிகளில் உரையாற்றினார்.

மறுபுறம், காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி நேற்று விஸ்வநாத் மற்றும் கோலாகாட் ஆகிய இடங்களில் நடைபெற்ற பொதுக்கூட்டங்களில் உரையாற்றினார்.

கடந்த சட்டப்பேரவைத் தேர்தலின் போது அளித்த முக்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற பிஜேபி தவறிவிட்டதாக அவர் குற்றம் சாட்டினார்.

காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு, சிறந்த மருத்துவம், பெண்களுக்கு அதிகாரம் அளித்தல் மற்றும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் தினசரி ஊதியத்தை **450** ரூபாயாக உயர்த்துதல் ஆகியவற்றைச் செய்வதாக அவர் உறுதி அளித்தார்.

சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள கேரளம் மற்றும் புதுச்சேரியிலும் இறுதிக்கட்டப் பிரச்சாரத்தில் அரசியல் கட்சித் தலைவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

<<<<>>>>

சமையல் எரிவாயு கிடங்குகளில் இருந்து நேரடியாக எல்.பி.ஜி சிலிண்டர்களை விற்பனை செய்வதற்கு தில்லி அரசு முழுமையாக தடை விதித்துள்ளது.

எந்தவித இடையூறும் இன்றி எல்.பி.ஜி விநியோகம் செய்யப்படுவதை அரசு உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாக முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா தெரிவித்தார்.

பதிவு செய்யப்பட்ட அனைத்து சிலிண்டர்களும் தடையின்றி வீடுகளுக்கே நேரடியாக விநியோகம் செய்யப்படுவதால், பொதுமக்கள் எரிவாயு முகவர் நிலையங்களுக்கோ அல்லது சேமிப்பு கிடங்குகளுக்கோ நேரில் செல்ல வேண்டாம் என்று அவர் அறிவுறுத்தினார்.

<<<<>>>>

செயிண்ட் கிட்ஸ் மற்றும் நெவிஸ் நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. டென்சில் டக்ளஸ் நேற்று மாலை புது தில்லி வந்தடைந்தார்.

இது குறித்து வெளியுறவு அமைச்சகம் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், அவரது இந்தப் பயணம் இரு நாடுகளுக்கும் இடையிலான வரலாற்று ரீதியான உறவுகளை வலுப்படுத்துவதிலும், ஒத்துழைப்பை விரிவுபடுத்துவதிலும் ஒரு முக்கிய மைல்கல்லாக அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயணத்தின் போது, இந்தியாவில் செயிண்ட் கிட்ஸ் மற்றும் நெவிஸ் நாட்டின் தூதரகம் முறைப்படி திறந்து வைக்கப்பட உள்ளது.

<<<<>>>>

மேற்காசிய மோதல் மற்றும் உலகளாவிய எரிசக்தி விநியோகத்தில் அதன் தாக்கம் குறித்து வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், கத்தார் பிரதமர் ஷேக் முகமது பின் அப்துல் ரஹ்மான் பின் ஜாசிம் அல்தானியுடன் நேற்று தொலைபேசி வாயிலாக பேசினார்.

இதனைத் தொடர்ந்து, ஐக்கிய அரபு அமீரகத்தின் வெளியுறவு அமைச்சர் ஷேக் அப்துல்லா பின் சயீத் அல் நஹ்யானுடனும் வெளியுறவுத்துறை அமைச்சர் உரையாடினார்.

ஹார்முஸ் நீரிணை கப்பல் போக்குவரத்திற்காக மீண்டும் திறக்கப்படாவிட்டால், ஈரானிய மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் பாலங்களை அழிக்கப்போவதாக அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் ஈரானுக்குப் புதிய எச்சரிக்கை விடுத்தார்.

இதனால் மேற்காசியாவில் பதற்றம் அதிகரித்துள்ள சூழலில், கத்தார் பிரதமர் மற்றும் ஐக்கிய அரபு அமீரக வெளியுறவு அமைச்சருடன் டாக்டர் ஜெய்சங்கர் தற்போதுள்ள நிலைமையை கேட்டறிந்தார்.

<<<<>>>>

அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே பதற்றம் தொடர்ந்து அதிகரித்து வரும் நிலையில், முக்கியத்துவம் வாய்ந்த ஹார்முஸ் ஜலசந்தியை மீண்டும் திறக்க ஈரானுக்கு கொடுக்கப்பட்ட காலக்கெடுவை அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் நீட்டித்துள்ளதாகத் தெரிகிறது.

இதுகுறித்து திரு. ட்ரம்ப், தனது சமூக வலைதளத்தில் நாளை இரவு 8 மணி வரை கெடு விதித்திருப்பதாக கூறியுள்ளார்.

ஈரானுடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும் அல்லது ஹோர்முஸ் நீரிணையை திறக்க வேண்டும் என்று அவர் ஈரானுக்கு நினைவுபடுத்தியுள்ளார்.

நாளை ஈரானின் எரிசக்தி மற்றும் உள்கட்டமைப்புகளை வாஷிங்டன் முடிவுக்குக் கொண்டுவரும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

ஈரானில் உள்ள மிகப்பெரிய மின் உற்பத்தி நிலையம் மற்றும் பாலங்கள் தகர்க்கப்படும் என்றும், ஹார்முஸ் நீரிணையை திறக்காவிட்டால், ஈரான் மக்கள் நரகத்தில் வாழ வேண்டியிருக்கும் என்றும் அவர் கடுமையாக கூறியுள்ளார்.

முன்னதாக செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் திரு. டிரம்ப், ஈரானுடன் ஒப்பந்தம் ஏற்படுவதற்கு நல்ல வாய்ப்பு உள்ளது, ஆனால் அவர்கள் உடன்படவில்லை என்றால் கடும் விளைவுகளை சந்திக்கவேண்டியிருக்கும் என்று எச்சரித்துள்ளார்.

இந்நிலையில் ஹார்முஸ் நீரிணை வழியாக கடல்சார் போக்குவரத்தை எளிதாக்குவது குறித்து ஓமன் மற்றும் ஈரான் நாடுகள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளன.

முக்கியத்துவம் வாய்ந்த இந்தப் பாதையில் பாதுகாப்பான கப்பல் போக்குவரத்தை மீட்டெடுப்பதற்கான வழிகளை ஆராய, இரு நாடுகளின் அதிகாரிகளும் தொழில்நுட்ப வல்லுநர்களுடன் இணைந்து ஆலோசனையில் ஈடுபட்டனர்.

<<<<>>>>

மேற்காசியாவில் நடைபெற்று வரும் போருக்கு மத்தியில், இஸ்ரேலுக்கான தனது விமான சேவைகளை ஏர் இந்தியா நிறுவனம் நிறுத்திவைத்துள்ளது.

புதுதில்லி - டெல் அவிவ் இடையிலான விமான சேவைகள் மே 31 ஆம் தேதி வரை ரத்து செய்யப்பட்டுள்ளதாக ஏர் இந்தியா அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பெரும்பாலான முன்னணி விமான நிறுவனங்கள் டெல் அவிவ் வழித்தடத்திலான தங்களது சேவைகளை நிறுத்தியுள்ளன.

இஸ்ரேலிய விமான நிறுவனங்கள் மட்டுமே கடும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு இயங்கி வருகின்றன.

விமான சேவைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் அதிகரித்து வரும் பதற்றத்திலிருந்து தப்பிக்க இந்தியா செல்ல விரும்பும் இஸ்ரேலில் வாழும் **40** ஆயிரத்திற்கும் மேற்பட்ட இந்தியர்கள் கவலையடைந்துள்ளனர்.

இஸ்ரேலை விட்டு வெளியேற விரும்பும் இந்தியர்கள், ஜோர்டான் அல்லது எகிப்து நாடுகளுக்கு தரைவழி எல்லைகள் வழியாகச் சென்று, அங்கிருந்தே பயணிக்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

<<<<>>>>

தென்மேற்கு இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் நிலைநிறுத்தப்பட்டுள்ள இந்தியக் கடற்படையின் முன்னணிப் போர்க்கப்பலான **INS Trikand**, வெள்ளிக்கிழமை தான்சானியாவின் **Dar es Salaam** துறைமுகத்தை சென்றடைந்தது.

இந்தியா மற்றும் தான்சானியா இடையிலான ஒத்துழைப்பு மற்றும் நட்புறவுகளை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு இந்தப் பயணம் அமைந்துள்ளது.

<<<<>>>>

ஆசிய மல்யுத்த சாம்பியன் போட்டி கிர்கிஸ்தான் தலைநகர் **Bishkek-**ல் இன்று தொடங்குகிறது.

இந்த தொடரில் இந்திய மல்யுத்த வீரர் மற்றும் வீராங்கனைகள் மிகுந்த நம்பிக்கையுடன் களமிறங்க உள்ளனர்.

மகளிர் 53 கிலோ எடைப் பிரிவில் மீனாட்சி கோயட், ஆடவர் 61 கிலோ எடைப் பிரிவில் Aman Sehrawat, 65 கிலோ எடைப் பிரிவில் Sujeet Kalkal ஆகியோர் பங்கேற்கிறார்கள்.

-------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியின் இன்றைய ஆட்டத்தில் பஞ்சாப் அணி - கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

கொல்கத்தாவில் நடைபெறும் இப்போட்டி இரவு 7.30 மணிக்கு தொடங்குகிறது.

முன்னதாக நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பெங்களூரு அணி 43 ரன் வித்தியாசத்தில் சென்னை அணியை வென்றது.

முதலில் விளையாடிய பெங்களூரு அணி, 20 ஓவரில் 3 விக்கெட் இழப்பிற்கு 250 ரன் எடுத்தது.

251 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய சென்னை அணி 19 புள்ளி 4 ஓவரில் 207 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

------------

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் மும்பை அணி **1-0** என்ற கோல் கணக்கில் ஒடிசா அணியை வென்றது.

நேற்று நடைபெற்ற மற்றொரு போட்டியில் தில்லி அணி **2-0** என்ற கோல் கணக்கில் கேரள அணியை வென்றது.

------------

**Candidate** செஸ் தொடரின் **7**வது சுற்றில் பிரக்ஞானந்தா - அமெரிக்காவின் **Fabiano Karuana** உடன் சமன் செய்தார்.

மகளிர் பிரிவில் வைஷாலி - சீனாவின் **Tan Zhongyi**-கிற்கு எதிரான ஆட்டத்தில் வெற்றி பெற்றார்.

-------------

**<<<<The End>>>>**